Approved by the Text Book Committee Madras & P
vide page 212 of the Consolidated list dated 10--5-

தொண்டமான் தமிழ் வாசகம்.

இரண்டாம் புத்தகம்.

1369

ஆசிரியர்:

பி. என். சுவாமிநாதசிவம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 JUL 1938
MADRAS

பிரசுரகர்த்தர்:

பி. என். சுவாமிநாதசிவம் & கம்பெனி.

பப்ளிஷர்ஸ், புக்ஸெல்லர்ஸ் & ஸ்டேஷனர்ஸ்,

புதுக்கோட்டை.

காப்பி ரைட்] **1938** [விலை அணா 4

OPINIONS.

I have gone through the Tondaiman Tamil Vachagams for Standards II & III written by Mr. P. N. Swaminathasivam. They are in suitable style for the young readers. I have great pleasure in recommending it for the Elementary Schools. I hope it will be welcomed both by the teachers and the taught.

Pudukottah,
5—2—36.

(Sd.) G. RAMAIYANGAR,
Retired Deputy Inspector of Schools.

M. Sundaramier, B.A., L.T.,
Senior Deputy Inspector of Schools,
Lalgudi Range.

LALGUDI,
25—4—36.

I had an opportunity to peruse the contents of Thondaiman Tamil Readers Nos., 2 and 3 intended for standards two and three and have the greatest pleasure in bearing testimony to the suitability of the Readers for the respective standards both from the point of view of the language, aim, and their cultural value.

I wish the author all success in his efforts for serving the educational world, by means of his useful publications.

(Sd.) M. SUNDARAMIER.

தொண்டைமான்

தமிழ் வாசகம்

இரண்டாம் புத்தகம்

OFFICE OF THE REGISTRAR
17 JUL 1938
MADRAS

ஆசிரியர் :

பி. என். சுவாமிநாத சிவம்

பிரசுரகர்த்தர் :

பி. என். சுவாமிநாத சிவம் & கம்பெனி,

பப்ளிஷர்ஸ், புக்ஸெல்லர்ஸ் & ஸ்டேஷனர்ஸ்,

புதுக்கோட்டை.

பதிப்புரிமை] 1938 [விலை அணா 3

Second Edition 1938.

PRINTED AT THE
SRI VIDYA POWER PRESS,
KUMBAKONAM.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 JUL 1938
MADRAS

FOREWORD.

I went through portions of Tondaiman Tamil Vachagam for Standards II and III written by Mr. P. N. Swaminatha Sivam. He is an enterprising author and his book is interesting and suited to the pupils of the standard for whom he writes. I have no doubt that his publication will be welcome both to the teachers and taught.

(Sd.) Rao Sahib R. KRISHNAMACHARIAR,

Assistant Administrator,

2—2—36

Pudukkottai State.

முகவுரை.

குழந்தைகள் மனதில் உற்சாகத்தை உண்டாக்கிப் பிறகு அவர்களை நம் தாய்பாஷையில் தேர்ச்சி அடையச்செய்யவேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு இந்த தொண்டைமான் இரண்டாம் வாசக புஸ்தகத்தை நான் எழுதியிருக்கிறேன்.

இப்புஸ்தகத்தை வாசிக்கும் சிறுவர்களின் வயதிற்கேற்ப, படப்பழக்கம், சுகாதாரம், அபிநயப்பாட்டு, பொது அறிவு முதலிய விஷயங்களை அமைத்து பாடங்களை எழுதியுள்ளேன்.

ஒவ்வொரு பாடமும் சிறுவர்களுக்கு இன்பமளித்து அறிவை விருத்திசெய்வதுடன் நம்தாய் பாஷையின் மேன்மையையும் நன்ருக எடுத்துக்காட்டுமென்பது என் நம்பிக்கை. என்னை இத்தொழிலில் ஈடும்படும்படி செய்த எனது சகோதர ஆசிரியர்களுக்கு எனது நன்றி உரியதாகும். வித்யாவிசாரணை சங்கத்தார் இம் முயற்சியிலே தக்க ஆதரவு அளித்து என்னை ஊக்குவார்கள் என்று நம்புகிறேன்.

இன்னும் இப் புத்தகத்தின் நலத்தைக் கருதி அன்பர்கள் கூறும் விஷயங்களை வந்தனத்துடன் ஏற்றுக்கொள்ளச் சித்தனுயிருக்கிறேன்.

ஆசிரியன்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
17 JUL 1938
MADRAS

பொருளடக்கம்.

1.	அரசர்	... 7
2.	நமது சக்கரவர்த்தி	... 8
3.	ரோஜா	... 9
4.	மயில்	... 10
5.	கிளி	... 11
6.	கணபதி	... 12
7.	வாத்து	... 13
8.	படம் சேர்த்துப் படித்தல்	... 14
9.	அங்க வீனர்கள்	... 16
10.	ஒலியின் குறிப்பு	... 17
11.	அறு சுவைகள்	... 20
12.	நிறங்கள்	... 21
13.	பசு	... 22
14.	ருதுக்களும் அயனமும்	... 23
15.	தொழிலின் பெயர்கள்	... 24
16.	அடுக்குத் தொடர்கள்	... 25
17.	சூரியன்	... 26
18.	செக்கு	... 27
19.	யானை	... 28
20.	தென்னை	... 30
21.	புலியும் இடைப் பையனும்	... 32
22.	புலியும் இடைப் பையனும் (பாட்டு)	... 34
23.	நாணயம்	 35
24.	யானைக்குக் குறும்பு செய்தவன் பட்டபாடு	... 37

25.	தபால்காரன்	....	39
26.	நரியும் திராக்ஷைக் குலையும்	...	42
27.	நரியும் திராக்ஷையும் (பாட்டு)	....	43
28.	தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை	...	44
29.	கரும்பு	...	46
30.	சம்பாஷணை—I	...	47
31.	சம்பாஷணை—II	...	49
32.	பிறவிக் குருடன்	...	51
33.	தூக்கணங் குருவிகளும் குரங்கும்	...	52
34.	கிழமைகளும் வாரமும்	...	54
35.	ராசிகள்	...	,,
36.	பெரியாரின் அமுத மொழிகள்	...	55
37.	விடுகதைகள்	...	56
38.	படப் பழக்கம்—I	...	57
39.	படப் பழக்கம்—II	...	58
40.	ஆத்திச்சூடி	....	59
41.	உலக நீதி	...	60
42.	கடவுள் வாழ்த்து	...	63

தொண்டைமான் தமிழ் வாசகம்

இரண்டாம் புத்தகம்



1. அரசர்

இவர் புதுக்கோட்டை அரசர்.
இவர் தொண்டைமான் வம்சத்தைச் சேர்ந்தவர்..
இவர் பெயர் ராஜகோபாலத் தொண்டைமான்.
இவர்களுக்கு ஸ்ரீ பிரகதம்பாள் குல தெய்வம்.
ஆதலால் இவருக்கு பிரகதம்பாதாசர் என்ற பட்
இவர் ஒருவரே தமிழ் நாட்டரசர். [டம் உண்டு
நமது அரசர் பல்லாண்டு வாழ்க.



2. நமது சக்கரவர்த்தி

தம்பி! படத்தைப் பார்.

படத்தில் இருப்பவரே நமது சக்கரவர்த்தி.

இவர் பெயர் ஆறாவது ஜார்ஜ்.

இவர் சமீபத்தில் பட்டத்தைப் பெற்றார்.

இவர்தான் நம்மை ஆளும் சக்கரவர்த்தி.

பல அரசர்களுக்கு மேலான அரசர்.

ஆதலால் இவருக்கு சக்கரவர்த்தி என்று பெயர்.

இவர் தந்தை ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தி.

இவர் தாயார் மேரி மஹாராணியார்.

சக்கரவர்த்தியின் செங்கோல் நீடூழி வாழ்க.



3. ரோஜா

படத்தில் இருக்கும் செடியைப் பார்.

அது மிகவும் அடர்த்தியாக இருக்கிறது.

அது ஒரு ரோஜாச் செடி.

ரோஜாச் செடியில் முள் அடர்ந்து இருக்கிறது.

ரோஜாப்பூ மிகவும் வாசனை உள்ளது.

பூவில் அநேக இதழ்கள் இருக்கும்.

பூ சிவப்பும் வெண்மையும் கலந்த நிற முள்ளது.

இந்த நிறத்தைத்தான் ரோஜா நிறம் என்று சொல்வார்கள்.

பூவிலிருந்து பன்னீர் எடுக்கலாம்; குல்குந்து செய்யலாம்.

ரோஜாமொட்டு மருந்துக்கு உதவும்.

ரோஜா மலரினால் மாலைகள் கட்டலாம்.



4. மயில்

அண்ணா! இது என்ன படம்?
தம்பி! இது மயிலின் படம்.
மயில் காட்டில் வசிக்கும்.
அது மிகவும் அழகான பறவை.
ஆண் மயிலுக்குத் தோகை உண்டு.
பெண் மயிலுக்குத் தோகை இல்லை.
தோகையினால் விசிறி கட்டலாம்.
இறகுகள் மருந்துக்கு உதவும்.
மயில் மேகத்தைக் கண்டு ஆடும்.
அது பூச்சி, புழு, தானியம் முதலியவைகளைத் தின்னும்.
மயில் பாம்பைக் கொல்லும்.
இது முருகக் கடவுளுடைய வாகனம்.



5. கிளி

கிளியின் படத்தைப் பார்!

அது மரப் பொந்துகளில் வசிக்கும்.

கிளியின் மூக்கு வளைந்து இருக்கும்.

அது சிகப்பு நிறமுடையது.

கிளி மூக்கின் உதவியால் கொட்டைகளை உடைத்துத் தின்னும்.

அது அதிக உயரம் பறக்காது.

கிளியில் பச்சை வெள்ளை எனப் பல நிறங்கள் உண்டு.

ஐந்து நிறமுடைய கிளிக்கு பஞ்ச வர்ணக்கிளி என்று பெயர்.

கிளியை நாம் நன்ருகப் பேசப் பழக்கலாம்.

அது கொஞ்சிக் கொஞ்சிப் பேசும்.

பூனை கிளியைக் கொல்லும்.

மனிதர்கள் கிளியைக் கூண்டில் வைத்து வளர்ப்பார்கள்.

இவ்விதம் கூண்டில் அடைத்து வளர்ப்பது பாவம்

6. கணபதி

இது கணபதி படம்.
இவர் யானை முகத்தை உடையவர்.
இவருக்கு ஐந்து கைகள் உண்டு.
இவர் ஆறுமுகனுடைய தமயன்
இவர் பார்வதியின் குமாரர்.
இவர் தந்தை பரமசிவன்.
இவர் ஆவணி மாதம் பிறந்தவர்.
இவர் பிறந்த நாள் நமக்கு ஒரு பண்டிகை.
அதுவே விநாயக சதுர்த்தி.
இவருக்குப் பிள்ளையார், விக்னேசுவரர்,
விநாயகர் முதலிய பல பெயர்கள் உண்டு.
இவர் துன்பங்களை நீக்குவார்.
ஆதலால் தினமும் இவரை வணங்கு.



7. வாத்து

வாத்து பூமியிலும் நீரிலும் வசிக்கும்.

அதன் உடல் படகுபோல் குவிந்திருக்கும்.

அதன் மூக்கு தட்டையானது.

அதற்கு இரண்டு கால்கள் உண்டு.

கால்விரல்களின் மத்தியில் தோல் இருக்கிறது.

அதனால் தண்ணீரில் விரைவாய் நீந்தும்.

அதற்கு இறகுகள் உண்டு.

அந்த இறகின்மேல் ஓர்விதப் பசை இருக்கிறது.

அதனால் அதன்மேல் தண்ணீர் ஒட்டாது.

வாத்து குவாக் குவாக் என்று கத்தும்.

வாத்து புழு, பூச்சி, தவளை, மீன் முதலியவைகளைத் தின்னும்.

வாத்து அசைந்து அசைந்து நடக்கும்.

வாத்தை மனிதர்கள் தின்பார்கள்.

8. படம் சேர்த்துப் படித்தல்

தண்
ணீரில்



வசிக்கும்.

தச்சன்
செய்த



மாடு



இழுக்
கும்.

மா இடிக்க
லாம்.

பூனை



பிடிக்
கும்.



படிக்க உத
வும்.



எழுத உத
வும்.

நாய்  காக்கும்.

குழந்தை  தூங்கு
கிறது.



வேகமாகப்
போகும்.

9. அங்க வீனர்கள்

கால் இல்லாதவன் நொண்டி.

கை இல்லாதவன் முடவன்.

கண் தெரியாதவன் குருடன்.

காது கேளாதவன் செவிடன்.

வாய் பேசாதவன் ஊமை.

மூக்கு இல்லாதவன் மூக்கறையன்.

மயிர் இல்லாதவன் மொட்டை.

முதுகு வளைந்தவன் கூனன்.

10. ஒலியின் குறிப்பு

சீ று ம்.



க ரை யு ம்.

அ ல று ம்.

கூ வு ம்.



அ க வு ம்.

கொஞ்சும்.



கூவும்.



பிளிறும்.



கனைக்கும்.



கர்ஜிக்கும்.

கத்தும்.

இச்சிடும்.



குரைக்கும்.



ஊளையிடும்.

கத்தும்.

11. அறு சுவைகள்

கரும்பு தித்திக்கும்.

மிளகாய் காரமாய் இருக்கும்.

புளியம்பழம் புளிக்கும்.

பாக்கு துவர்க்கும்.

கடல் நீர் உவர்க்கும்.

பாகற்காய் கசக்கும்.

சர்க்கரையின் சுவை என்ன ?

மிளகு என்ன சுவை ?

எலுமிச்சம்பழத்தின் சுவை என்ன ?

கடுக்காய் என்ன சுவை ?

உப்பின் சுவை என்ன ?

வேப்பிலை என்ன சுவை ?

தித்திப்பு, காரம், புளிப்பு, துவர்ப்பு. உவர்ப்பு, கசப்பு இவைகளுக்கு அறு சுவைகள் என்று பெயர்.

12. நிறங்கள்

பால் வெண்மை நிறம்.

கரும் பலகை கருமை நிறம்.

இலை பச்சை நிறம்.

கோவைப்பழம் சிவப்பு நிறம்.

எலுமிச்சம்பழம் மஞ்சள் நிறம்.

சுண்ணும்பின் நிறம் என்ன ?

புற்களின் நிறம் என்ன ?

இரத்தம் என்ன நிறம் ?

பழுத்த இலைகளின் நிறம் என்ன ?

வெண்மை, கருமை, பச்சை, சிவப்பு, மஞ்சள் ஆகிய இவைகளுக்கு பஞ்ச வர்ணம் என்று பெயர்.



13. பசு

பசு சாதுவான பிராணி.
அது பால் கொடுக்கும்.
அதன் பால் உடம்புக்கு நல்லது.
அதற்கு இரண்டு கொம்புகள் உண்டு.
அதற்கு நான்கு கால்கள் உண்டு.
அதற்கு ஒவ்வொரு காலிலும் இரண்டு குளம்புகள் உண்டு.
பசுவிற்கு ஒரு வால் உண்டு.

அது வாலின் உதவியால் ஈக்களை ஓட்டும். பசுவின் ஆண் கன்றுக்கு காளைக்கன்று என்று பெயர். அதன் பெண் கன்றுக்குக் கிடாரி என்று பெயர். பசு புல், வைக்கோல், பிண்ணாக்கு முதலியவைகளைத் தின்னும்.

அதன் சாணம் வீட்டைச் சுத்திசெய்ய உதவும். பசுவின் பாலில் பிரையிட்டால் தயிர் வரும். அத் தயிரைக் கடைந்தால் வெண்ணெய் உண்டாகும்; வெண்ணெயை உருக்கினால் நெய்யாகும்.

14. ருதுக்களும் அயனமும்

ஒரு வருஷத்துக்கு ஆறு ருதுக்கள் உண்டு. அவையாவன:—

சித்திரையும் வைகாசியும்	—	வசந்தருது
ஆனியும் ஆடியும்	—	கிரீஷ்மருது
ஆவணியும் புரட்டாசியும்	—	வருஷருது
ஐப்பசியும் கார்த்திகையும்	—	சரத்ருது
மார்கழியும் தையும்	—	ஹேமந்தருது
மாசியும் பங்குனியும்	—	சசிர ருது

ஒரு வருஷத்திற்கு இரண்டு அயனங்கள் உண்டு.

(1) தை மாதம் முதல் ஆனி மாதம் முடிய உத்தராயணம்.

(2) ஆடி முதல் மார்கழி முடிய தக்ஷிணாயனம்.



15. தொழிலின் பெயர்கள்

மீன் பிடிப்பவன் செம்படவன்.
மரவேலை செய்பவன் தச்சன்.
துணியை வெளுப்பவன் வண்ணான்.
துணியைத் தைக்கிறவன் தையற்காரன்.
இரும்பு சாமான்கள் செய்கிறவன் கருமான்.
பித்தளை பாத்திரங்கள் செய்கிறவன் கன்னான்.
மண்பாண்டம் செய்கிறவன் குயவன்.
நிலத்தை உழுகிறவன் உழவன்.
துணியை நெய்கிறவன் சேணியன்.
நகைகளைச் செய்கிறவன் தட்டான்.
வீட்டைக் கட்டுகிறவன் கொத்தன்.
தேசத்தை ஆளுபவர் அரசர்.
பாடம் கற்பிக்கிறவர் ஆசிரியர்.
பண்டம் விற்கிறவன் வர்த்தகன்.
எல்லாத் தொழிலும் நமக்கு அவசியமே.
நாம் ஒரு தொழிலையும் இகழ்தல் கூடாது.

16. அடுக்குத் தொடர்கள்

சோறு தள தள என்று கொதித்தது.
நாங்கள் குடு குடுவென்று ஓடினேம்.
கண்ணன் திடு திடு வென்று நடந்தான்.
தேங்காய் குலே குலேயாகக் காய்க்கிறது.
இராமன் பாம்பு பாம்பு என்று கதறினன்.
மாடுகள் மந்தை மந்தையாய்ப் போகின்றன.
பள்ளியில் சிறுவர்கள் வரிசை வரிசையாய் நிற்கிருர்கள்.
பூ கொத்துக் கொத்தாய்ப் பூத்திருக்கிறது.
பாம்பு வளே ந்து வளே ந்து செல்கிறது.
காகங்கள் கூட்டம் கூட்டமாய் வசிக்கின்றன.
புஸ்தகங்கள் அடுக்கு அடுக்காய் இருக்கின்றன.
எறும்புகள் சாரை சாரையாய் ஊருகின்றன.
மின்னல் பளிச் பளிச்சென்று மின்னுகிறது.
வாழைப்பழம் சீப்புச் சீப்பாய் விற்கிறது.
மணி கண கணவென்று அடிக்கிறது.
பறவை இறகைப் படபடவென்று அடித்தது.
மரம் மள மள என்று முறிந்து விழுந்தது.
பூ கம கம வென்று வாசனே வீசுகிறது.
யானேகள் அணி அணியாய்ச் சென்றன.
தபால்காரன் வீடு வீடாக நுழைகிருன்.



17. சூரியன்

பிள்ளைகளே! படத்தில் தெரிவது சூரியன். சூரியன் காலையில் கிழக்கில் உதிக்கிறான்; மாலையில் மேற்கில் மறைகிறான்.

சூரியன் பிரகாசிக்கும் காலத்திற்குப் பகல் என்று பெயர். சூரியனுக்கு பகலை உண்டாக்குவதால் பகலவன் என்ற மற்றொரு பெயரும் உண்டு. சூரிய கிரணம் மிகவும் உஷ்ணமாயிருக்கும். சூரிய உஷ்ணத்தினால்தான் புல் பூண்டுகள் வளர்கின்றன. சூரியனால் மழை உண்டாகிறது. சூரியவெளிச்சம் இல்லாவிட்டால் இருட்டாய் இருக்கும்.

சந்திரன் இரவில் வெளிச்சம் கொடுக்கிறான். சந்திர கிரணம் மிகவும் குளிர்ச்சியானது. சந்திர வெளிச்சத்திற்கு நிலா என்று பெயர். இரவில் வீட்டில் வெளிச்சத்திற்காக விளக்குகள் ஏற்றிவைக்கிறோம்.



18. செக்கு

இந்தப் படத்தைப் பார்! இது ஒரு செக்கு. இது பூமியில் புதைக்கப்பட்டிருக்கிறது. இது மரத்தால் செய்யப்பட்டது. இதைத் தச்சன் செய்தான்.

செக்கு, புளியமரம், வாகைமரம் முதலிய மரங்களால் செய்யப்படுகிறது. இதில் எள்ளு, கடலை, தேங்காய், வேப்பமுத்து, இலுப்பைப் பருப்பு முதலியவைகளைப் போட்டு ஆட்டி எண்ணெய் எடுக்கலாம்.

செக்கின் நடுவிலே ஓர் ஆழமான குழி இருக்கும். அதில் எள்ளைக் கொட்டுவார்கள். அதில் ஒரு உலக்கை இருக்கும். கைமரத்தின் கடைசியில் மாட்டைக்கட்டி ஓட்டுவார்கள். மாடு சுற்றும்பொழுது, குழியின் நடுவில் உள்ள எள்

நன்றாக அரைபட்டு, அதிலிருந்து எண்ணெயும் பிண்ணாக்கும் வரும். அந்த எண்ணெய்க்கு நல்லெண்ணெய் என்று பெயர்.

நல்லெண்ணெய் தேய்த்துக்கொள்வதற்கும், பலகாரங்கள் செய்வதற்கும், விளக்கெரிப்பதற்கும் உபயோகமாகும். பிண்ணாக்கை மாட்டுக்கு உணவாக உபயோகிக்கிறார்கள். இவ்விதமே மற்றவைகளிலிருந்தும் எண்ணெய் எடுக்கப்படுகிறது.



19. யானை

இது ஒரு யானையின் படம். யானை காட்டில் சஞ்சரிக்கும். இது நிலத்தில் வசிக்கும் எல்லா மிருகங்களையும் விடப் பெரியது. இது மிகவும் உயரமுள்ளது. யானையின் மண்டை பெரியது. ஆனால் கழுத்து குறுகி இருக்கும். அதன் உடல் பருத்து இருக்கும். அந்த உடலைத் தாங்குவதற்கு,

பெரிய உரல்போல் பருத்த நான்கு கால்கள் இருக்கின்றன.

யானையின் முன்னே நீண்டு தொங்குவது தும்பிக்கை. இத் தும்பிக்கையின் உதவியால்தான் தண்ணீரை உறிஞ்சிக் குடிக்கும். ஊசிபோன்ற சிறிய சாமான்களையும் எடுத்துவிடும். மரக்கிளைகளை முறித்துவிடும், துதிக்கை இல்லாவிட்டால் யானை உயிர்வாழமுடியாது. யானையின் கண்கள் மிகச் சிறியவை. அதன் காதுகள் முறம்போல் இருக்கின்றன. ஆண் யானைக்கு வாயில் இரண்டு பற்கள் உண்டு. பெண் யானைக்குக் கிடையா. அப்பற்கள் கடைவாயின் பக்கத்தில் முளைத்து இருக்கும். அவற்றுக்கு தந்தம் என்று பெயர். யானைத் தந்தம் அதிக விலை மதிப்புள்ளது.

யானை கரும்பு, நாணல், தானியம், தேங்காய், பழம் முதலியவைகளைத் தின்னும். யானை வெகு காலம் ஜீவித்திருக்கும்.

பழமொழி :—'யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன்.'



20. தென்னை

தென்னை மரம் மிகுந்த உஷ்ணப் பிரதேசங்களிலும், மணற்பாங்கான இடங்களிலும் நன்ருய் வளரும்.

தென்னை மரத்துக்குக் கிளைகள் இல்லை. கமுகு, ஈந்து, பனை முதலியவை இவ்வினத்தைச் சேர்ந்தவை. தென்னை மரத்தின்மேல் வடுக்கள் இருக்கும். அவ் வடுக்களை எண்ணி அதன் வயதைச் சொல்லலாம். தென்னை வைத்த ஐந்து வருஷங்களில் பலன் கொடுக்கும்.

தென்னை மரத்தின் உச்சியில் மட்டைகள் அடர்ந்து இருக்கும். அம் மட்டைகளுக் கிடையில தென்னம் பாளைகள் இருக்கும். அப்பாளையிலிருந்து பூ உண்டாகும். பூவிலிருந்து பிஞ்சு உண்டாகும். பிஞ்சைக் குரும்பை என்று சொல்லுவார்கள். குரும்பை முற்றி இள நீர் ஆகும். இள நீர் முற்றித் தேங்காயாகும்.

தேங்காயின் மேல் மட்டையும், கதம்பை, நாரும் மூடிக்கொண்டு இருக்கும். மட்டையை உரித்து, தேங்காய் எடுப்பார்கள். தேங்காய் கெட்டியான ஓட்டையுடையது. அதை உடைத்துப் பருப்பு எடுப்பார்கள்.

தேங்காய் தின்பதற்கும், சமையலுக்கும், பூஜைக்கும் உபயோகம் ஆகும். இள நீர் தாகத்தைத் தணிக்கும்.

முற்றின பருப்பை செக்கில் இட்டு ஆட்டி எண்ணெய் எடுப்பார்கள்.

தேங்காய் எண்ணெயைச் சமையலுக்கும் தேய்த்துக்கொள்வதற்கும், விளக்கு எரிப்பதற்கும், சோப் செய்வதற்கும் உபயோகப்படுத்துகிறார்கள்.

தென்னை மட்டையிலுள்ள ஓலைகளைப் பின்னிப் பந்தல்கள் போடலாம். தட்டிகள் முடையலாம். அதன் ஓலைகளைத் தைத்துச் சாப்பிட இலையாக உபயோகிக்கலாம். நரம்புகளைக் கிழித்து துடைப்பமாக உபயோகிப்பார்கள். அதன் அடிமரம் வீடு கட்டுவதற்கு உபயோகமாகும். பாளையை ஊறவைத்துக் கிழித்துக் கித்துகள் கட்டுவார்கள். நாரைக் கிழித்து கயிறு திரிப்பார்கள்; கொட்டாங்கச்சியை அகப்பை செய்யலாம், அடுப்புமெரிக்கலாம்.

பழமொழி :—“ஆவும் தென்னையும் ஐந்து வருஷங்களில் பலன் கொடுக்கும்”.

“அண்ணன் பிள்ளையை நம்புவதைவிட தென்னம் பிள்ளையை நம்பலாம்”.



21. புலியும் இடைப் பையனும்

ஒரு ஊரில் ஒரு இடைப்பையன் இருந்தான். அவன் பெயர் கிருஷ்ணன். அவன் தினம் ஆடுகளை மேய்க்கக் கொல்லைக் காட்டிற்குக் ஓட்டிப் போவது வழக்கம். அவன் தகப்பனும் மற்றவர்களும் அருகில் வயலில் வேலை செய்து கொண்டிருப்பார்கள்.

வழக்கம்போல் ஒரு நாள் கிருஷ்ணன் ஆடுகளைக் காட்டிற்கு ஓட்டிப் போனான். ஆடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. கிருஷ்ணன் தனக்கு அருகில் உழுபவர்களைக் கேலி செய்து ஏமாற்ற எண்ணினான்.

சிறிது நேரம் சென்று 'புலி வருகிறது, புலி வருகிறது' என்று கிருஷ்ணன் சத்தமிட்டான். உடனே அவன் தகப்பனும், மற்றவர்களும் ஓடி வந்து பார்த்தார்கள். அவர்களைக் கண்டவுடன்

கிருஷ்ணன் கைகொட்டிச் சிரித்தான். உண்மையில் புலி வரவில்லை. உடனே அவர்கள் திரும்பி வேலைக்குப்போய்விட்டார்கள்.

மறுபடியும் கிருஷ்ணன் விளையாட்டாகப் 'புலி வருகிறது, புலி வருகிறது' என்று சத்தமிட்டான். வயலில் வேலை செய்தவர்கள் திகிலடைந்து ஓடி வந்தார்கள். அப்பொழுதும் இவன் அவர்களைப் பார்த்து கைகொட்டிச் சிரித்தான். அவர்கள் கிருஷ்ணனைத் திட்டிவிட்டுச் சென்றார்கள்.

மறுபடியும் வேறோர்நாள் பொழுது போகும் சமயத்தில் உண்மையாகவே புலி வந்தது. கிருஷ்ணன் அதைப் பார்த்து நடுநடுங்கி, 'ஐயோ! புலி புலி' என்று கதறினான். முன்னம் இரண்டு தடவைகளில் ஏமாறிய உழவர்கள் கிருஷ்ணன் வார்த்தையை நம்பாமல் பொய்யாக அலறுகிறான் என்று கவனிக்கவில்லை. ஒருவரும் அங்கு போகவில்லை.

புலி கடுஞ் சினங் கொண்டு கிருஷ்ணனையும் ஆடுகளையும் கொன்று தின்றது. பொய் சொல்லியதால் கிருஷ்ணன் இறந்துபோனான். ஆதலால் விளையாட்டாகவும் பொய்யை நாம் சொல்லக் கூடாது என்பது நன்றாய் விளங்குகிறது.

பழமொழி:—நெஞ்சாரப் பொய் தன்னைச்
சொல்ல வேண்டாம்.

22. புலியும் இடைப் பையனும்

(பாட்டு)

(ஐயாப் பழனிமலை வேலா—என்ற மெட்டு)

ஆடுகளை மேய்க்கும் ஒரு சிறுவன்—அவன்
வேடிக்கையாய் பொய்யைச் சொல்லும் ஒருவன்
ஆடுகளை காட்டில் ஓட்டிச் சென்றான்
வேடிக்கை செய்திட எண்ணி நின்றான்—ஓர் நாள் 1.

புலி புலி யென்று சத்தம் போட—பலர்
தடிகள் கொண்டு வந்துவிட
புலி எங்கே என்று கூச்சலிட அவன்
கூடியே கைகொட்டி நகைத்திட 2.

ஜனங்கள் இவனை வைது சென்றார்
இப்படியே பலதாம் செய்தான்—இவன்
நிஜமாகப் புலி வந்ததோர் நாள் இவன்
புலி புலி யென்றலற லுற்றான். 3.

பொய்யனிவனென்று எண்ணினார்கள்—ஜனங்கள்
போய் உதவி செய்யாதிருந்தார்கள்
புலிவந்து ஆடுகளைக் கொன்று—இந்த
பையன் கிருஷ்ணனையும் கொன்று 4.

சென்றது காட்டினில் ஓடி—இவன்
உயிர்நீத்தான் மிக வாடி
பொய் சொல்லுபவன் கதி இதுதான்—என்
றுணர்ந்தறிவீர் உண்மை இதைத்தான். 5.

23. நாணயம்

நாம் கடையில் ஒரு பொருளை வாங்கவேண்டுமானால் பணத்தைக் கொடுக்கவேண்டுமல்லவா ! அதற்குத்தான் நாணயம் என்று பெயர்.

இது ஒரு பைசா. இதைத் தம்படி என்றும், சல்லி என்றும் சொல்லுவார்கள்.

இது ஒரு காலணா. இதை மூன்று பைசாவாக மாற்றலாம்.

இது ஒரு அரையணா. இதை இரண்டு காலணாவாக மாற்றலாம். இம் மூன்றும் செம்பினால் செய்தவை. இந் நாணயம் இப்பொழுது அதிக புழக்கமில்லை.

இது ஒரு அணா. இதைப் பன்னிரண்டு பைசாவாகவும், நான்கு காலணாவாகவும் இரண்டு அரையணாவாகவும் மாற்றலாம்.

இது அரைக்கால் ரூபாய். இதை இரண்டு அணாவாகவும் நான்கு அரையண
கவும், எட்டு கா
வாகவும் மாற்ற

இது ஒரு கால் ரூபாய். இதை நான்கு அணு வாகவும், இரண்டு அரைக்கால் ரூபாயாகவும்

எட்டு அரையணு வாகவும், பதினாறு காலணுவாகவும் மாற்றலாம். இவை நிக்கலால் செய்யப்பட்டவை. வெள்ளியால்

செய்த அரைக்கால் ரூபாயும், கால் ரூபாயும் வட்டமாய் இருக்கும்.

இது ஒரு அரை ரூபாய். இதை எட்டணுவாகவும் நான்கு அரைக் கால் ரூபாயாகவும் இரண்டு கால் ரூபாயாகவும் மாற்றலாம். இது வெள்ளியால் செய்யப்பட்டது.

இது ஒரு ரூபாய். இதை பதினாறு அணுக்களாகவும் எட்டு அரைக்கால் ரூபாயாகவும், நான்கு

கால் ரூபாயாகவும், இரண்டு அரை ரூபாயாகவும் மாற்றலாம். இதுவும் வெள்ளியால் செய்யப்பட்டது.

இது ஒரு சவரன். இது தங்கத்தால் செய்யப்பட்டது. இதைப் பவுன் என்று சொல்லுவார்கள். ஒவ்வொரு நாணயத்திலும் முன் பக்கத்தில் நமது சக்கரவர்த்தியின் தலையும், பின் பக்கத்தில் அதன் மதிப்பும் அது போடப்பட்ட வருஷமும் ஆங்கிலத்தில் அச்சிடப்பட்டிருக்கும்.

சவரன்

---

24. யானைக்குக் குறும்பு செய்தவன் பட்டபாடு

அநேக வருஷங்களுக்கு முன்னே வங்க தேசத்தை ஓர் அரசன் ஆண்டுவந்தான். அவன் தனது அரண்மனையில் ஓர் யானையை வளர்த்து வந்தான்.

பாகன் அந்த யானையின்மேல் ஏறிக்கொண்டு தினமும் ஆற்றுக்கு யானையைக் குளிப்பாட்டக் கொண்டுபோவது வழக்கம். அவன் ஆற்றுக்குப் போகும்வழியில் அவனுடைய சிநேகிதன் ஒருவன் இருந்தான். அவன் தையல் தைக்கும் தொழிலுடையவன்.

பிரதி தினமும் இந்த யானை அவன் கடையண்டை வந்ததும், துதிக்கையை நீட்டும். அவன் பழம் கொடுப்பான், அதைச் சாப்பிட்டு

விட்டு ஆற்றுக்குப் போய்க் குளித்து திரும்பி வருவது வழக்கம்.

சில காலம் சென்ற பின் ஒரு நாள் தையற்காரன் கையில் துணியை வைத்து தைத்துக் கொண்டு இருந்தான். வழக்கம்போல் யானை துதிக்கையை நீட்டிற்று. தையற்காரன் வழக்கம் போல் பழத்தைக் கொடுக்காமல், தன் கையில் வைத்திருந்த ஊசியால் குத்திவிட்டான். யானை தையற்காரன் தீங்கு செய்ததை மனதில் வைத்துக் கொண்டே ஆற்றுக்குப் போயிற்று. யானை ஆற்றில் குளித்தபிற்பாடு ஆற்றில் உள்ள ஜலத்தைக் கலக்கி, ஜலத்தையும் சேற்றையும் தன் துதிக்கையில் நிரப்பிக்கொண்டது.

திரும்பி வரும் பொழுது, வழக்கம்போல் சிநேகிதன் யானையை தையற்கடையில் நிறுத்தினான்.

உடனே, யானை தன் துதிக்கையில் நிரப்பியிருக்கும் சேற்றை தையற்காரன்மேல் வீசியது. அவன் கையில் வைத்து தைத்துக்கொண்டிருந்த பட்டுத் துணியும், அவன் ஆடைகளும் கெட்டுப் போய் விட்டன. அதனால் அவனுக்கு மிகுந்த நஷ்டம் ஏற்பட்டது. இந்தப் பாடத்தினால் யானை அதிக ஞாபகமுள்ள மிருகம் என்பது நன்றாய்த் தெரிகிறது.

நீதி:—பிறருக்கு தீங்கிழைக்காதே.

'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்'.

25. தபால்காரன்

தம்பி :—ஒரு தபால்காரன் கடிதம் கொண்டு வருகிறுன்.

அண்ணன்:—தபால்காரன் கடிதம் ஒன்றைக் கொடுத்தான்.

தம்பி:—இது எங்கிருந்து வந்தது ?

அண்ணன்:—மதுரையிலிருந்து மாமா எழுதியிருக்கிறுர்.

தம்பி:—தபால்காரனுக்குக் கூலி கொடுக்கவில்லையே ?

அண்ணன்:—அவனுக்குக் கூலி கொடுப்பதில்லை. தபால் ஆபீசில் முக்கால் அணு கொடுத்து



மாமா இக் கார்டை வாங்கி எழுதிப் போட்டிருக்கிறார்கள்.

தம்பி:—எல்லாக் கடிதங்களுக்கும் முக்கால் அணு தானு!

அண்ணன்:—அவ்விதம் இல்லை. சமாசாரங்கள் ஜாஸ்தியா யிருந்தாலும் ரகசியமா யிருந்தாலும் காகிதத்தில் எழுதி உறையில் வைத்துப் போடுவார்கள். அதற்கு ஒரு அணு தலைச் சீட்டு ஒட்டவேண்டும்.

தம்பி:—அது எவ்விதம் நமக்கு வந்துசேர்ந்தது.

அண்ணன்:—மாமா கடிதத்தின் ஒரு பக்கத்தில் விஷயத்தை எழுதினர். அக்கடிதத்தின் மற்றொருபக்கத்தில் மேல்விலாசத்தை எழுதி, தபாலாபீஸில் போட்டுவிட்டார். அதைத் தபால் உத்தியோகஸ்தர்கள் எடுத்து நமது ஊருக்கு ஒரு பையில்போட்டுக் கட்டி ரயிலில் அனுப்பியிருக்கிறார்கள்.

தம்பி:—நமக்கு எவ்விதம் அது வந்து சேர்ந்தது.

அண்ணன்:—தபால்காரன் ரயிலில் போய் அந்தப் பையை வாங்கிவந்து ஆபீசில் கடிதங்களுக்கு



முத்திரைபோடுவான் பிறகு ஒவ்வொரு விலாசதாரிடமும் நமக்குக் கொண்டுவந்த தைப்போல் கொண்டுபோய்க் கொடுப்பான்.

தம்பி:—தபால்காரனுக்கு இது மிகவும் கஷ்ட மல்லவா. ஒருவனே ஊர் முழுவதும் கொடுக்க முடியுமா?

அண்ணன்:—இவனைத் தவிர இன்னும் சில தபால்காரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கொண்டு வந்து கொடுப்பார்கள்.

தம்பி:—இவர்களை யார் நியமித்திருக்கிறார்கள்?

அண்ணன்:—தபால் இலாகாவில் இவர்களை நிய மித்திருக்கிறார்கள். இவர்களுக்கு அங்கே சம்பளம் கொடுக்கிறார்கள்.

தம்பி:—இதை யார் ஏற்படுத்தினார்கள்?

அண்ணன்:—கருணையுடைய நமது ஆங்கிலேய அரசாட்சியார் செய்கிற நன்மையில் இது வும் ஒன்றாகும்.



26. நரியும் திராக்ஷைக் குலையும்

ஒரு காட்டில் ஒரு நரி இருந்தது. அது அக் காட்டிலுள்ள முயல் கோழி முதலியவைகளைப் பிடித்துத் தின்றுகொண்டு வந்தது. ஒரு நாள் அதற்கு உணவு ஒன்றும் கிடைக்கவில்லை. காடு முழுவதும் அலைந்து தேடிப் பார்த்தது. கடைசியாக ஒரு தோட்டத்தில், திராக்ஷைக் கொடி ஒன்று படர்ந்திருந்தது. அதன் நுனியில் திராக்ஷைக் குலை ஒன்று தொங்கிக்கொண்டிருந்தது.

அந்தக் குலையைப் பார்த்ததும் நரி மிகவும் ஆனந்தமடைந்தது. நரியின் நாக்கில் ஜலம் ஊறவாரம்பித்தது. இப் பழத்தைத்தின்று பசியாறலாம் என்று நினைத்துத் தாவிப் பார்த்தது.

எட்டவில்லை. மறுபடியும் தாவித் தாவிப் பார்த்தது. அப்பொழுதும் குலை அதற்கு எட்டவில்லை.

கடைசியாகத்தன் முழுபலத்துடன் தாவிற்று குலை எட்டாமல் கீழே படீரென்று விழுந்தது. பிற்பாடு சீச்சி சீச்சி இந்தப் பழம் புளிக்கும். தின்றால் பல் கூசும் என்று சொல்லிவிட்டு ஓடிப் போய்விட்டது.

பழமொழி:—கிட்டாதாயின் வெட்டன மற.

---

27. நரியும் திராக்ஷையும்

(பாட்டு)

நாலு புறத்திலும் கோபுரமும்—என்ற மெட்டு

பசியால் வாடிய நரி யொன்று
பலபல விடங்கள் திரிந் தலைந்து
கண்டது ஓர் திராக்ஷக் குலையை
உண்டிட வெண்ணிய தக் குலையை
குதித்துக் குதித்துப் பார்த்திடவே
குலையும் உயரமாய் இருந்திடவே
எட்டி எட்டிப் பார்த்திடவே
எட்ட மாட்டா தென்றுணர்ந் திடவே
சீச்சி இந்தப் பழம் புளிக்கும்
சீ இதைத் தின்றால் பல்கூசும்
கிட்டாதானால் ஒரு பொருள் தான்
சட்டென மறப்பது நலந்தருமே.

28. தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை

மதுரையில் கிருஷ்ணன் என்று ஒரு பையன் இருந்தான். அவன் மிகுந்த ஏழை. அவன் தந்தை அவன் பிறப்பதற்குமுன்னமேயே இறந்து விட்டார். ஆதலால் அவன் தாய் அவனை வளர்த்து வந்தாள்.

அவன் தினம் பள்ளிக்கூடத்திற்குச் சென்று நன்றாக வாசித்து வந்தான். விடுமுறை நாள் வந்தது. அதற்கு அவன் அயலூரிலுள்ள தன்



மாமன் வீடு போக எண்ணினான். அவன் தாய் அவனிடம் 'துணையோ டல்லது நெடுவழி போகேல்' என்று சொல்லிப்பின்பு ஒரு கலயத்தில் ஒரு

நண்டைப்போட்டு அக் கலயத்தின் வாயைத் துணியால் மூடி அவனிடம் கொடுத்து அனுப்பிஞள்.

கிருஷ்ணன் அதை எடுத்துக்கொண்டு காட்டின் வழியே புறப்பட்டுப்போஞன். வெயில் கடுமையாக இருந்தது. போகும் வழியில் ஒரு தடாகத்தைக் கண்டான். அத் தடாகக் கரையில் உள்ள ஆலமரத்தின் அடியில் போய்ச் சற்றுப் படுத்தான். வெயில் மிகவும் கடுமையாக இருந்ததால், அவன் அயர்ந்து தூங்கிவிட்டான்.

அவன் படுத்துத் தூங்கிக்கொண்டிருக்கும் பொழுது அவன் தலையண்டை ஒரு கரு நாகம் வந்தது. அது அவன் தலைப்பக்கத்திலுள்ள கலயத்தின் மேல் துணியைத் துளைத்து உள்ளே தலையை நுழைத்தது. கலயத்தில் இருந்த நண்டு பாம்பை இரண்டாகத் துண்டித்து விட்டது.

சற்றுநேரம் கழித்து கிருஷ்ணன் விழித்துத் திரும்பிப் பார்த்தான். பாம்பு கடிபட்டு இரண்டு துண்டாகக்கிடந்ததைப் பார்த்தான். அப்பொழுது அவன் தாயின் வார்த்தை அவனுக்கு ஞாபகம் வந்தது. தாயைத் தெய்வமாக எண்ணி மனமார துதித்தான். பிற்பாடு அவன் தன் மாமன் வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தான்.

பழமொழி:—'துணையோடல்லது நெடுவழி போகேல்'

றேன். அதை வைத்து ஒரு ஊரின் பெயரைச் சொல்' என்றான். அதற்குக்கிருஷ்ணன் சம்மதித்தான். 'எனக்கு ஏதேனும் தெரியாவிட்டால் நீ

சொல்ல வேண்டும்' என்று வாக்குறுதி வாங்கிக் கொண்டான்.

கோவிந்தன்:—உனக்குத் தெரியாதது ஒன்றும் இல்லை ; நல்லது, சொல்கிறேன் பார்.

கோவிந்தன்:—பட்டினம்.

கிருஷ்ணன்:—நாகப்பட்டினம்.

கோவிந்தன்:—பாளையம்.

கிருஷ்ணன்:—மேட்டுப்பாளையம்.

31. சம்பாஷனை-II

கோவிந்தன்:—பள்ளி

கிருஷ்ணன்:—திருக்காட்டுப்பள்ளி

கோவிந்தன்:—கோணம்

கிருஷ்ணன்:—கும்பகோணம்

கோவிந்தன்:—பட்டி

கிருஷ்ணன்:—ஆண்டி பட்டி

கோவிந்தன்:—மங்கலம்

கிருஷ்ணன்:—திருமங்கலம்

கோவிந்தன்:—குடி

கிருஷ்ணன்:—நண்பா! யோசனை செய்கிறேன்; இதோ ஞாபகம் வந்துவிட்டது; குன்றக்குடி.

கோவிந்தன்:—கல்

கிருஷ்ணன்:—திண்டுக்கல்

கோவிந்தன்:—ஊர்

கிருஷ்ணன்:—தஞ்சாவூர்

கோவிந்தன்:—மலை

கிருஷ்ணன்:—மலைக்கு ஒன்றும் சொல்ல முடியாமல் திகைத்தான். பிற்பாடு கோவிந்தனைச் சொல்லச் சொன்னான்.

29. கரும்பு

கரும்பு உஷ்ணப் பிரதேசங்களில் ஏராள மாய்ப் பயிராகும். இது கணுவுடைய ஒரு வித நாணல். இது சுமார் ஆறுமுதல் பன்னிரண்டடி வரையில் உயரமாக வளரும்.

கரும்பில் அநேக கணுக்கள் உண்டு. அக் கரும்பை ஒவ்வொரு கணுவாக வெட்டி பூமியில்



நடுவார்கள். அக் கணுவிலிருந்து, சில நாட்களில் இலை முளைக்கும். இலைகள் குறுகலாயும் நீளமா யும் இருக்கும். தண்டின் மேற்பக்கத்தில் பூக் கள் பூக்கும்.

கரும்பு நன்ருய் முற்றுவதற்கு பன்னிரண்டு அல்லது பதினுன்கு மாதங்களாகும். முற்றின கரும்பை அறுத்து ஆலேக்குக் கொண்டு போவார்கள். கரும்பை ஆலேயிலிட்டுச் சாறு பிழிவார்கள். கரும்பின் சாறு மிகவும் தித்திப்பாக இருக்கும்.

பிறகு அந்தச் சாற்றைப் பெரிய பாத்திரங்களில் ஊற்றிக் காய்ச்சுவார்கள். பிறகு அதை அச்சுக்குழியில் ஊற்றிக் குளிரவைப்பார்கள்.

மறுநாள் அச்சுக் குழிகளேத் தட்டினுல் வெல்லம் எல்லாம் அச்சு அச்சாக விழுந்துவிடும். இந்தச் சாற்றையே இன்னும் நன்ருகச் சுத்தி செய்து கற்கண்டும், ஜீனியும் செய்கிருர்கள்.

---

30. சம்பாஷனே-I

கிருஷ்ணன் கோவிந்தன் என்ற இரண்டு பேர்களும், ஓர் விடுமுறை நாளில் சந்தித்தார்கள். கிருஷ்ணன் 'இங்கே வா, நாம் விளேயாடுவோம்' என்ருன். அதற்குக் கோவிந்தன் 'எனக்கு விளேயாட இஷ்டம் இல்லே. ஆனுல் நாம் இரண்டு பேரும் வேடிக்கையாகப் பேசுவோம்' என்ருன்.

'சரி' என்று கிருஷ்ணன் சொன்னுன். பிற்பாடு கோவிந்தன் 'நான் ஒரு பெயர் சொல்லுகி

கோவிந்தன்:--இது உனக்கு கஷ்டமாயிருக்கிறதா! கார்த்திகை தீபம் என்று சொல்லுகிறூர்களே. அதுதான் மிகவும் பெயர் பெற்ற ஸ்தலம். ரயிலில் கூடக் குறைவுக் கட்டணம் உண்டு. உனக்கு இன்னும் தெரியவில்லையா. அது தான் திருவண்ணுமலே.

கிருஷ்ணன்:—நான் அதை மறந்து விட்டேன். இனிமேல் ஞாபகம் வைத்துக் கொள்கிறேன். பொழுதும் போய்விட்டது. வந்தனம் என்று சொல்லிவிட்டு வீட்டுக்குத் திரும்பினுன்.

---

32. பிறவிக் குருடன்

மயிலாப்பூரில் ஓர் குடியானவன் இருந்தான். அவன் பிறவிக் குருடன். ஆதலால் அவனுக்கு எந்தப் பொருளின் ரூபமும் அறிய முடியாமல் போயிற்று. அவனுக்குச் சிறிது காலஞ் சென்று மணம் நடந்தது. பிற்பாடு ஓர் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு, பசுவின்பாலைக் கொடுத்து வளர்த்து வந்தார்கள்.

இவ்விதமிருக்க ஒரு நாள் குழந்தை பாலைக் குடிக்கும்பொழுது பால் புரைக்கேறி இறந்து விட்டது. அப்பொழுது குருடனைக் காண ஓர் சிநேகிதன் வந்தான். அவனைக் குருடன் அதைப் பற்றிக் கேட்டான்.

குருடன்:—குழந்தை எப்படி இறந்தது.

சிநேகிதன்:—குழந்தை பால் குடிக்கும்பொழுது புரையேறியதால் இறந்தது.

குருடன்:—பால் எப்படி இருக்கும்.

சிநேகிதன்:—பால் வெண்மையாய் இருக்கும்.

குருடன்:—வெண்மை நிறம் எப்படியிருக்கும்.

சிநேகிதன்:—வெண்மை நிறம் கொக்கைப் போல் இருக்கும்.

குருடன்:—கொக்கு எப்படி இருக்கும். உடனே சிநேகிதன் கையைக் கொக்கைப்போலக்

கோணலாக வளைத்து, பார் என்று காட்டினன். குருடன் அவன் கையைத் தடவிப் பார்த்தான். பின்பு, ஐயோ! இவ்வளவு பெரிய பொருள் குழந்தை வாயில் போனுல் அது சாகாமல் இருக் குமா என்று அழுதான்.

---

33. தூக்கணங் குருவிகளும் குரங்கும்

முன்ஞெரு காலத்தில் ஒருகாட்டில் ஓர் பெரிய ஆலமரத்தில் பல தூக்கணங் குருவிகள் கூடுகட்டி வசித்து வந்தன. ஒரு நாள் காற்று மிகவும் பலமாய் அடித்தது. உடனே மழையும் வந்து விட்டது. அந்த சமயத்தில் ஓர் குரங்கு மழையில் நனைந்து கொண்டு அம்மரத்தண்டை வந்தது.

மரத்தின் மேல் இருந்த குருவிகள் குரங் கைப் பார்த்து, 'ஏ குரங்கே! நீ உருவத்தில் மனித ரைப் போலிருக்கிருய். உனக்குக் கால்களும் கை களும் இருக்கின்றன. நீ ஏன் இம்மழையில் நனைந்து துன்பப்பட வேண்டும். உன்னைவிட உருவத்தில் சிறியவர்களாகிய நாங்கள் ஓர் கூடு கட்டிக்கொண்டு சுகமாக இருக்கிருேமே, நீ ஏன் கூடு கட்டிக் கொள்ளக் கூடாது' என்று கேட்டன. இவ்வார்த்தையைக் கேட்டவுடன் குரங்கு மிகவும்

கோபங்கொண்டு, 'அடே ஊசிவாய் மூடா! நீயா எனக்கு புத்தி சொல்லுகிருய். எனக்கு கூடு கட்டத் தெரியாது. ஆனல் கட்டின கூட்டைப் பிரிக்கத் தெரியும்' என்று சொல்லிற்று.

உடனே திடீரென்று மரத்தின்மேல் தாவி அக்கூடுகளைப் பிரித்தெறிந்தது. கூட்டிலுள்ள முட்டைகளையும் குஞ்சுகளையும் நாசமாக்கியது. குழந்தைகளே! துஷ்ட புத்தியையுடைய குரங்குக்கு புத்தி புகட்டியதால் தூக்கணங் குருவிகள் கஷ்டத்தை யடைந்தன. ஆதலால் நாம் துஷ்டருக்கு புத்தி சொல்லக் கூடாது.

பழமொழி:—துஷ்டருச்கு புத்தி புகட்டினல் துன்பம் உண்டாகும்.

34. கிழமையும் வாரமும்

ஒரு பகலும் ஒரு இரவும் சேர்ந்தது ஒரு நாள். ஏழு நாட்கள் கொண்டது ஒரு வாரம். அவையாவன:—

ஞாயிற்றுக் கிழமை	புதன் கிழமை
திங்கட் கிழமை	வியாழக் கிழமை
செவ்வாய்க் கிழமை	வெள்ளிக் கிழமை

சனிக்கிழமை

ஞாயிறு என்று சூரியனுக்கு மற்றொரு பெயர் உண்டு. சூரியனால்தான் நாள் உண்டாகிறது.

ஆதலால் தான் வாரத்தின் நாட்கள் ஞாயிறு முதல் ஆரம்பமாகிறது. இந்த ஏழு கிழமைகளும் சேர்ந்தது ஒரு வாரம்.

முப்பது நாட்கள் கொண்டது ஒரு மாதம். பன்னிரண்டு மாதங்கள் கொண்டது ஒரு வருஷம்.

---

35. ராசிகள்

சித்திரைமுதல் பங்குனிமுடிய தமிழ் மாதங்கள் பன்னிரண்டு. பன்னிரண்டு மாதங்களுக்கும் பன்னிரண்டு ராசிகள் உண்டு. அவையாவன:—

சித்திரை—மேஷம்	ஐப்பசி—துலாம்
வைகாசி—ரிஷபம்	கார்த்திகை—விருச்சிகம்
ஆனி—மிதுனம்	மார்கழி—தனுசு
ஆடி—கடகம்	தை—மகரம்
ஆவணி—சிம்மம்	மாசி—கும்பம்
புரட்டாசி—கன்னி	பங்குனி—மீனம்

36. பெரியாரின் அமுதமொழிகள்

காலையில் சீக்கிரம் விழித்து எழு.

பெற்றோரை வணங்கு.

பல்லை நன்றாய் பால்போல் துலக்கு.

தினமும் கடவுளை வணங்கு.

நித்தம் குளித்து சுத்தமாயிரு.

கந்தை ஆனாலும் கசக்கிக் கட்டு.

கூழ் ஆனாலும் குளித்துக்குடி.

ஒன்றே செய்யினும் நன்றே செய்க.

அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷம்.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.

ஆலும் வேலும் பல்லுக்குறுதி.

கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி.

மனக் கவலை பலக் குறைவு.

வளையப்போனாலும் வழியே போ.

முயற்சி உடையார் இகழ்ச்சியடையார்.

எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்.

மேழிச் செல்வம் கோழைபடாது.

உப்பு இட்டவரை உள்ளளவும் நினை.

37. விடுகதைகள்

1. செப்பு நிறைய முத்து
இது என்ன? மாதுளம்பழம்.

2. ஓட்டமாய் ஓடும், உருண்டு உருண்டு ஓடும்; பள்ளத்தைக் கண்டால் பாய்ந்து ஓடும்.
தண்ணீர்.

3. பச்சைப் பசேலென்றிருக்கும் பாகற்காய் அல்ல; பக்கமெல்லாம் முள்ளிருக்கும் பலாக் காயும் அல்ல; உள்ளே வெளுத்திருக்கும் தேங்காயும் அல்ல; உருக்கினல் நெய்வரும் வெண்ணெயும் அல்ல.
அஃது என்ன? கொட்டை முத்து.

4. காணுமல் பூ பூக்கும்
கண்டு காய் காய்க்கும். அத்தி.

5. ஊரெங்கும் ஓயாமல் திரிவான்
உத்தியோகம் ஒன்றும் இல்லை.
அது யார்? நாய்.

6. கண்டு பூ பூக்கும்
காணுமல் காய் காய்க்கும்.
அஃது என்ன? வாகை.

7. குடிக்கத் தண்ணீர் உண்டு. ஆனல்
குளிக்கத் தண்ணீர் இல்லை
இது என்ன? இளநீர்.

8. ஐந்து வீட்டுக்கு ஒரு முற்றம்.
அஃது என்ன? உள்ளங்கை.

9. ஊரெங்கும் ஒரு கூரை.
அது என்ன? ஆகாயம்.

38. படப் பழக்கம்

1. காக்கை தாகத்திற்கு தண்ணீர் கிடைக்காமல் சுற்றிப் பார்த்தல்; ஓர் குடம் காணப்படுதல்.

2. தண்ணீர் குடத்தின் அடியில் இருத்தல்; சமீபத்தில்உள்ள கற்களைத் தூக்கிக் குடத்தில் போடுதல்.

3. பலதரம் தன்னுடைய மூக்கின் உதவியால் கற்களைக் குடத்தில் போட்டு நிரப்புதல்.

4. தண்ணீர் குடத்தின் மேல் வருதல்; காக்கைத் தண்ணீரைக் குடித்தல்; தாகம் தணிந்து சந்தோஷமடைதல்.

மேலே உள்ள படத்தையும் சிறு வாக்கியங்களையும் வைத்துக்கொண்டு கதையைச் சுருக்கமாக எழுதுக.

39. படப் பழக்கம்



1. காக்கை ஓர் வடையை கௌவிக்கொண்டு மரக்கிளையில் இருத்தல். நரி அங்கே வருதல்.



2. நரி காக்கையைத் தப்பு ஸ்தோத்திரம் செய்தல்.



3. தப்பு, ஸ்தோத்திரத்தைக் கண்டு மகிழ்ந்த காக்கை பேச வாயைத் திறத்தல். வடை கீழே விழுதல்.



4. நரி கௌவிக்கொண்டு ஓடுதல். காக்கை ஏமாந்து போகுதல்.

மேலே உள்ள படத்தையும் சிறு வாக்கியங்களையும் வைத்துக்கொண்டு, கதையைச் சுருக்கமாக எழுதுக?

40. ஆத்திசூடி

1. அறஞ்செய விரும்பு.
2. ஆறுவது சினம்.
3. இயல்வது கரவேல்.
4. ஈவது விலக்கேல்.
5. உடையது விளம்பேல்.
6. ஊக்கமது கைவிடேல்.
7. எண்ணெழுத் திகழேல்.
8. ஏற்பதிகழ்ச்சி
9. ஐயமிட்டுண்.
10. ஒப்புரவொழுகு.
11. ஓதுவதொழியேல்.
12. ஔவியம் பேசேல்.
13. அஃகஞ் சுருக்கேல்.
14. கண்டொன்று சொல்லேல்.
15. ஞயம்படவுரை.
16. இணக்கமறிந்திணங்கு.
17. தந்தைதாய்ப் பேண்.
18. நன்றி மறவேல்.
19. இயல்பலாதன செயேல்.
20. வஞ்சகம் பேசேல்.
21. கூடிப் பிரியேல்.
22. செய்வன திருந்தச் செய்
23. தூக்கி வினைசெய்.
24. அறனை மறவேல்.

41. உலக நீதி

1. ஓதாமல் ஒரு நாளும்
இருக்கவேண்டாம்.
2. ஒருவரையும் பொல்லாங்கு
சொல்லவேண்டாம்.
3. மாதாவை ஒருநாளும்
மறக்கவேண்டாம்.
4. வஞ்சனைகள் செய்வாரோ(டு)
இணங்கவேண்டாம்.
5. நெஞ்சாரப் பொய்தன்னைச்
சொல்லவேண்டாம்.
6. நஞ்சுடனே ஒரு நாளும்
பழகவேண்டாம்.
7. நல்லிணக்கமில்லாரோடு
இணங்கவேண்டாம்.
8. போகாத இடந்தனிலே
போகவேண்டாம்.
9. அஞ்சாமல் தனிவழியே
போகவேண்டாம்.
10. அடுத்தவரை ஒரு நாளும்
கெடுக்கவேண்டாம்.

11. தனம் தேடி உண்ணுமல்
புதைக்கவேண்டாம்.

12. தருமத்தை ஒரு நாளும்
மறக்கவேண்டாம்.

13. கொலைகளவு செய்வாரோ(டு)
இணங்கவேண்டாம்.

14. கற்றவரை ஒரு நாளும்
பழிக்கவேண்டாம்.

15. வார்த்தை சொல்வார் வாய் பார்த்துத்
திரியவேண்டாம்.

16. மதியாதார் தலைவாசல்
மிதிக்கவேண்டாம்.

17. மூத்தோர் சொல் வார்த்தை தனை
மறக்கவேண்டாம்.

18. முன்கோபக் காரரோ(டு)
இணங்கவேண்டாம்.

19. சேராத இடந்தனிலே
சேரவேண்டாம்.

20. செய்நன்றி ஒரு நாளும்
மறக்கவேண்டாம்.

21. பிணையிட்டுத் துணைபோய் நீ
நிற்கவேண்டாம்.

22. காணாத வார்த்தைகளைக்
கட்டுரைக்க வேண்டாம்.

23. புண்படவே வார்த்தைதனைச்
சொல்லவேண்டாம்.

24. வாதாடி வழக்குரைத்துச்
சொல்லவேண்டாம்.

25. திறம்பேசிக் கலகமிட்டுத்
திரியவேண்டாம்.

26. இறந்தாலும் பொய் தன்னைச்
சொல்லவேண்டாம்.

27. தெய்வத்தை ஒருநாளும்
மறக்கவேண்டாம்.

28. கோயில் இல்லா ஊரில் குடி
இருக்கவேண்டாம்.

29. எளியாரை எதிரிட்டுக்
கொள்ளவேண்டாம்.

30. மூத்தோர் சொல் வார்த்தைதனை
மறக்கவேண்டாம்.

31. போகவிட்டு புறஞ்சொல்லித்
திரியவேண்டாம்.

32. புறஞ்சொல்லித் திரிவாரோடு
இணங்கவேண்டாம்.

கடவுள் வாழ்த்து

திருமால் துதி

பச்சைமா மலைபோல் மேனி பவழவாய்க்
கமலச் செங்கண், அச்சுதா! அமரரேறே!
ஆயர்தம் கொழுந்தே என்னும் இச்சுவை தவிர
யான் போய் இந்திர லோகமாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகருளானே.

விநாயகர் துதி

பாலும் தெளிதேனும் பாகும் பருப்பு(ம்) இவை
நாலும் கலந்(து) உனக்கு நான் தருவேன்—கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே! நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா.

சுப்பிரமணியர் துதி

ஏறுமயி லேறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசும்முகம் ஒன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுகம் ஒன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதி யருணாசல மமர்ந்த பெருமாளே.

PRINTED AT THE SRI VIDYA POWER PRESS, KUMBAKONAM.

K. R. VENKATARAMA AIYAR B.A., L.T., Headmaster MAHARAJA'S COLLEGE.

PUDUKKOTTAH, 24—2—'36

I had occasion to go through the readers of the Tondaiman Tamil Vachakam for Standards II and III and I am glad to be able to testify to their excellence. The lessons are properly graded; the vocabulary has been chosen with care and the subject matter is suitable and varied. I wish the author every success.

(Sd.) K. R. VENKATARAMAN.

K. V. SUBBAIYA IYER, M.A., L.T., M.R.A.S. (London).
Retired District Educational Officer

TRICHINOPOLY. 25—4—1936.

This is to certify that at the request of Mr. P. N. Swaminathasivam, I went through his readers two and three (Thondaiman Tamil Vachagam) and found them very carefully prepared. The lessons are well chosen and are suited to the requirements of the standards for which they are intended. I am sure they will be found to be highly useful by the Teachers who have to teach them to the children of the lower standards.

I wish the author success in his enterprise and long life that he may carry on this useful work for the benefit of the teaching population.

(Sd.) K. V. SUBBAIYA AIYAR.

OPINIONS.

M. R. Ry.

Dewan Bahadur

K. S. RAMASWAMI SASTRIAR Avl.

I have perused with much interest the Tondaiman Tamil Readers II & III which have been written by Mr. P. N. Swaminatha Sivam. I find that they not only present modern Scientific Knowledge in a simple and popular and attractive form and disseminate correct views about the civic and political and administrative aspects of our national life but also acquiant the readers with the noble ethical ideals and religious concepts which form the very life of our life. I feel sure that they will be of very great use to the students in our Elementary Schools and will have a warm welcome at the hands of the Teachers.

I wish the books an ever growing public appreciation, and hope that the author will continue his public service by bringing out more books which will spread far & wide a blended culture in which the most valuable of the ancient ideas and the most useful of the modern ideas will be enshrined.

(Sd.) Dewan Bahadur K. S. Ramaswami Sastri,

Retired District & Sessions Judge,

Madras.